தமிழ் நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
மற்றும் இந்திய வானிலைத் துறை இணைந்து வழங்கும்
வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனைகள் - காஞ்சிபுரம் & செங்கல்பட்டு மாவட்டம்
வேளாண் அறிவியல் நிலையம் – காஞ்சிபுரம்.
(09.07.2022 முதல் 13.07.2022, 8.30 மணி வரை )

**அறிக்கை எண் 054/ கே.வி.கே/கே.பி.எம்/2022** *நாள்* & **தேதி:** வெள்ளிக்கிழமை & 08.07.2022

**வானிலை முன்னறிவிப்பு** (09.07.2022 முதல் 13.07.2022, 8.30 மணி வரை)

| | 09.07.2022 | 10.07.2022 | 11.07.2022 | 12.07.2022 | 13.07.2022 |
|---|---|---|---|---|---|
| மழை (மி.மீ.) | **00** | **04** | **00** | **04** | **04** |
| அ.வெப்பநிலை | 36 | 36 | 36 | 36 | 36 |
| கு. வெப்பநிலை | 28 | 28 | 28 | 28 | 28 |
| ஒப்புஈரப்பதம் I | 70 | 70 | 70 | 70 | 70 |
| ஒப்புஈரப்பதம் II | 60 | 60 | 60 | 60 | 60 |
| காற்றின்வேகம் (கி.மீ/மணி) | 10 | 10 | 10 | 10 | 10 |
| காற்றின் திசை | மேற்கு வடமேற்கு | மேற்கு வடமேற்கு | மேற்கு | மேற்கு தென்மேற்கு | மேற்கு தென்மேற்கு |
| மேக மூட்டம் | பெரும்பாலும் தெளிவாக காணப்படலாம் | பெரும்பாலும் தெளிவாக காணப்படலாம் | பெரும்பாலும் தெளிவாக காணப்படலாம் | ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படலாம் | ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படலாம் |

**வானிலை முன்னறிவிப்பு தகவல்கள்:** காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டதைப் பொறுத்தவரையில், அடுத்த ஐந்து நாட்களில் 10.07.2022, 12.07.2022 மற்றும் 13.07.2022 ஆகிய மூன்று நாட்களுக்கு லேசான மழைக்கு வாய்ப்புள்ளது, வெப்பநிலை அதிகபட்சமாக 36 டிகிரி செல்சியஸ் வரையும் குறைந்தபட்சமாக 28 டிகிரி செல்சியஸ் வரையும் பதிவாக்கலாம். மேலும் காற்றானது மணிக்கு 10 கி.மீ. வேகத்தில் மேற்கு தென்மேற்கு திசையில் வீசலாம். காற்றின் ஈரப்பதமானது 60-70% வரை பதிவாகலாம். வானம் முதல் மூன்று நாட்களுக்கு பெரும்பாலும் தெளிவாக காணப்படலாம் அடுத்த இரு நாட்களுக்கு ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படலாம். **பொது அறிவிப்பு:** வரும் 14.07.2022 - 20.07.2022 தமிழ் நாடு மற்றும் புதுவையைப் பொறுத்தவரையில் மழையானது இயல்பை விட குறைவாகவும், குறைந்த மற்றும் அதிகபட்ச வெப்பநிலை இயல்பான அளவு பதிவாகலாம்.

## வானிலை சர்ந்த வேளாண் ஆலோசனைகள்

| பயிர் | பருவம் | ஆலோசனைகள் |
|---|---|---|
| பொது அறிவிப்பு | | லேசான மழை எதிர்பார்க்கப்படுவதினால் விவசாயிகள் பயிர்களுக்கு பாசனம் செய்வதினை தள்ளிவைக்கலாம். மேலும் மழைநாட்களில் பூச்சி பூஞ்சாண மற்றும் களைக்கொல்லிகள் தெளிப்பதினை தவிர்க்கலாம். |
| குறுந்செய்தி | | நெல் வயலில் இலை சுருட்டுப்புழு தாக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் பூச்சி தாக்க அறிகுறிகள் தென்படுமாயின் ஹக்டருக்கு குளோரோடேரினிலிபுருள் 150 கிராம் அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம். |
| பயிர் - நெல் | தூர்கட்டும் பருவம் | நெல் வயலில் இலை சுருட்டுப்புழு தாக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் பூச்சி தாக்க அறிகுறிகள் தென்படுமாயின் ஹக்டருக்கு குளோரோடேரினிலிபுருள் 150 கிராம் அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம். |
| நிலக்கடலை | வளர்ச்சி வருவம் | நிலக்கடலை பயிரை முன் பருவ இலைப்புள்ளி நோய் தாக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் நோயினை மேலாண்மை செய்ய ஒரு ஏக்கருக்கு குளோரோதலோனில் 400 கிராம் என்ற அளவில் தெளிக்கலாம். |
| மிளகாய் | காய்க்கும் பருவம் | மிளகாய் பயிரை பேன் பூச்சிகள் தாக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் பூச்சியை கட்டுப்படுத்த எமாமெக்டின் பென்ஜொவேட் 5 % SG பூச்சிக்கொல்லி மருந்தை லிட்டருக்கு 4 கிராம் அளவில் தெளிக்கலாம். |
| கத்தரி | நாற்றங்கால் | நிலவும் வானிலை கத்தரி நாற்றங்காலில் அழுகல் நோயை ஏற்படுத்தலாம் என்பதால் அதனை கட்டுப்படுத்த சூடோமோனாஸ் ஃப்ளோரசன்ஸை 2.5 கிலோ என்ற அளவில் 50 கிலோ தொழு உரத்துடன் கலந்து இடலாம். அல்லது நாற்றங்காலில் மேட்டுப்பாத்திகள் அமைத்து அதிகப்படியான நீர் தேங்குவதை தவிர்க்கலாம். |
| கால்நடை | கறவை | விவசாயிகள் கால்நடைகளுக்கு 30-50 கிராம் தாதுப்பு கலவையை தீவனத்துடன் |

| | | |
|---|---|---|
| அறிவியல் | மாடுகள் | கலந்தளிப்பதால் கால்நடைகளின் உற்பத்தியை மேம்படுத்தலாம். விவசாயிகள் கறவை மாடுகளுக்கு குடல் புழு மற்றும் ஒட்டுண்ணி நீக்கம் செய்வதினால் ஒட்டுண்ணி தாக்கத்தினை தவிர்க்கலாம். |
| | செம்மறி மற்றும் வெள்ளாடு | விவசாயிகள் ஆடுகளுக்கு குடல் புழு மற்றும் ஒட்டுண்ணி நீக்கம் செய்யலாம். ஆடுகளின் வளர்ச்சி மற்றும் உற்பத்தியை அதிகரிக்க தாதுப்பு கட்டிகளை கொட்டகைகளில் கட்டி வைக்கலாம். மழையினால் முளைத்த புதிய புற்களில் விவசாயிகள் ஆடுகளை மேச்சலுக்கு அனுப்புவதினை தவிர்க்கலாம். |
| | கோழி | கோழி பண்ணையாளர்கள் கோழிகளுக்கு தீவனத்தினை பிரித்து அளிப்பதினால் தீவனம் சேதத்தினை தவிர்த்து உடல் எடையை அதிகரிக்கலாம். |
| மீன்வளம் | உள்நாட்டு மீன் வளர்ப்பு | வரும் ஐந்து நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்பட வாய்ப்புள்ளதால் மீன் வளர்ப்பு குளங்களில் நுன் பாசிகளின் உற்பத்தியானது பெருக்கம்மடையாமல் நிலைத்து காணப்படும். எனவே மீன் /இறால் குளங்களில் வழக்கமான நீர் மாற்று விகிதத்தை 50%சதவீதமாக குறைப்பதன் மூலம் நுன் பாசிகளின் அடர்த்தி குறையாமல் பாதுகாக்கலாம். மழை முன்னறிவிப்பினை கருத்தில் கொண்டு விவசாயிகள் குளத்தின் நீர் மட்டத்தினை 20-30 செண்டிமீட்டர் வரை குறைக்கலாம். மழை நீர் வடிகால் குளங்களில் களைமீன்கள் மற்றும் இதர மீன்கள் கலந்து வராமலிருக்க நீர்புகு மடைகளில் 5 மி.மீ முதல் 15 மி.மீ வரை அளவுள்ள வலைகளை பொருத்தலாம். மீன் குளத்தில் உள்ள நீர் வெளியேறும் குழாய்களில் மழைக்காலத்தில் நீருடன் மீன் குஞ்சுகள் மற்றும் மீன்கள் வெளியேறுவத்தினை தவிர்க்க வலைகளை அமைக்கலாம். |
| | பொது மீன்கள் | விவசாயிகள் மீன்களின் தீவனமிடும் நேரத்தினை காலை 7 மணி மற்றும் மாலை 5 மணிக்கு பின்பு மாற்றிக் கொள்ளலாம். விவசாயிகள் நீரின் கடினத்தன்மை மற்றும் அமோனியா அளவினை கணக்கிட்டு நீர் பரிமாற்றம்/ சுண்ணாம்பு போன்றவற்றை பயன்படுத்தலாம். மேலும் விவசாயிகள் மீன் தீவனம் மற்றும் தீவனம் அளிக்கும் விகிதத்தினை தேவைக்கு ஏற்ப மாற்றிக்கொள்ளலாம். மீன் / இறால் தீவனதுடன் 1-3% மீன் எண்ணெய் கலந்த வைட்டமின் மற்றும் தாதுக்கள் நிறைந்த தீவனங்களை அளிக்கலாம். |
| இந்த வானிலை சர்ந்த வேளாண் ஆலோசனை தகவல்கள் காஞ்சிபுர வேளாண்மை அறிவியல் நிலையம் தொழில்நுட்ப வல்லுநர்களின் ஒப்புதலோடு வெளியிடப்படுகிறது. | | |

திட்ட அலுவலர்,
மாவட்ட வானிலை பிரிவு
வேளாண் அறிவியல் நிலையம் – காஞ்சிபுரம்